சிஆர்எம்பி.2507/2022

சுந்தரமகாலிங்கம், த/பெ.பாலகுரு, திருவில்லிபுத்துர் என்பவரது சத்திய பிரமாண வாக்குமூலம்

Solemenly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of the day of 26.12.2022

**<u>சத்திய பிரமாண வாக்குமூலம்</u>**

1. நான் தற்போது 56/39 மாயாண்டி பட்டி தெரு, ஆண்டாள் புரத்தில் குடியிருந்து வருகிறேன். எனது முப்பாட்டனாரான சிதம்பர மூப்பனார் என்பவரும் ஆறுமுகபெருமாள், முத்துகருப்பன் ஆகியோரும் கூட்டு சேர்ந்து 1889 மற்றும் 1950ம் வருடங்களில் திருவில்லிபுத்துர் தேரடி தெருவில் 22 கடைகள், 6 வீடுகள், திருவண்ணாமலை சன்னதிதெருவில் காலி கட்டிடம், காலிமனைகள் ஆகியவற்றை வாங்கியுள்ளார்கள்.

2. மேற்படி சொத்துக்களின் வருமானங்களை ஏழை நெசவாளர்களின் கல்விக்கும், அன்னதானத்திற்கும் செலவு செய்து வந்தார்கள். அவர்களின் மறைவிற்கு பின்பு எனது தந்தையான வாலகுரு மூப்பனார் என்பவர் மேற்படி சேவையை செய்து வந்தார். அவர் மறைவிற்கு பின்பு திருவில்லிபுத்துர் முதலியார் பட்டி தெருவை சேர்ந்த சண்முகநாதன் என்பவர் பொறுப்பேற்று மேற்படி சேவைகளை செய்து வந்தார். அவர்க்கு உதவியாக எனது எதிர்மனுதார்களாகிய முத்தழகு, சுப்பிரமணியன், கணேசன், சஞ்சீவி, அம்மையப்பன், சுப்பிரமணியன், குருசாமி, கண்ணன் ஆகியோர்கள் உதவியாக இருந்தார்கள்.

3. அந்த கால கட்டத்தில் மதுரை, பழனி, திருச்செந்தூர், திருப்பரங்குன்றம், சிதம்பரம், சங்கரன்கோவில் போன்ற இடங்களில் சண்முகநாதன் என்பவர் சொத்துக்கள் வாங்கினார். அவ்வாறு சண்முகநாதன்சொத்துக்கள் வாங்கியதில் அவர்கள் உதவியாளர்களாக இருந்த எதிர்மனுதாரர்கள் அந்த சொத்தில் உள்ள வருமானத்திலிருந்து பங்கு கேட்டுள்ளார்கள். அதற்கு சண்முகநாதன் கொடுக்க மறுத்து விட்டார். அதன் காரணமாக 2008ம் வருடம் முத்தழகு மற்றும் 7 எதிர்மனுதாரர்கள் கூட்டு சேர்ந்து, சண்முகநாதனிடமிருந்து கூட்டு சதி செய்து மேற்படி சொத்துக்களை 2009 ஆம் வருடம் பறித்து விட்டார்கள்.

4. அதன்பின்னர் அந்த சொத்துக்களை எதிர்மனுதார்களுக்குள் பகிர்ந்து கொள்வதாக சொல்லி தபால் மூலம் பேசிக் கொண்டார்கள். பின்பு 11.2.2018ம்தேதி நானும் எனது உறவினர்களும் சேர்ந்து எனது முப்பாட்டானாருடைய சொத்து என்றும் அந்த சொத்துக்களை நீங்கள் சரியாக பயன்படுத்தவில்லை என்று எதிர்மனுதாரர்களிடம் கூறினோம், மேலும் எதிர்மனுதாரர்களிடம் சொத்தின் வரவு செலவு கணக்குகளை சரியாக கொடுக்குமாறு கேட்டபோது எதிர்மனுதார்கள் கணக்குகளை கொடுக்க மாட்டோம் என்று சொல்லி எங்களை மரக்கட்டையால் தாக்கினார்கள்.

5. எங்களுக்கு உள்காயங்கள் ஏற்பட்டது. அப்போது 11.2.2018ம்தேதியன்றே

மதியம் 12 மணியளவில் திருவில்லிபுத்துர் அரசு மருத்துவமனைக்கு நான் சிகிச்சைக்காக சென்றேன். மருத்துவமனையில் இருந்தபோது என்னிடம் ஆய்வாளர் ஜஸ்டின் பிரபாகரன் என்பவர் சம்பவத்திற்காக மனு பெற்றார். எனக்கு வெளி காயம் எதுவும் இல்லை என்பதால் மருத்துவர் ரசீது எதுவும் வழங்கவில்லை.

6. அதன்பின்னர் காவலர்கள் எதிர்மனுதார்களை விசாரித்துள்ளார்கள். ஆனால் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்பதால் நான் மாநில காவல் துறை தலைவருக்கு சம்பவத்தை பற்றி தபால் மூலம் மனு கொடுத்தேன். என்னிடம் நடவடிக்கை எடுப்பேன் என்று சொல்லி தபால் மூலமாக பதில் சொல்லி திருவில்லிபுத்தூர் காவல் நிலையத்திற்கு நடவடிக்கை எடுக்க சொல்லி தெரிவித்தார். அதன்பின்பும் எதிர்மனுதார்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

7. காவல் நிலையம் சென்று புகார் கொடுக்கும்போது காவல் ஆய்வாளர் என்னை மிரட்டியதால், 5.3.2018 ம்தேதி மறுபடியும் காவல் ஆய்வாளருக்கு தபால் மூலமாக மனு கொடுத்தேன். அப்போதும் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. இது சம்மந்தமாக உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் நடவடிக்கை எடுக்குமாறு மனு செய்தேன். அப்போதும் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. 16.4.2018 ம்தேதி எனது புகார் மனு மீது நடவடிக்கை எடுக்குமாறு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. அந்த உத்தரவை நேரடியாகவும் தபால் மூலமாகவும் காவல் நிலையத்திற்கு நான் கொடுத்தேன்.

8. காவல் ஆய்வாளர் பணிமாறுதலில் சென்று விட்டார். அதன்பின்பு மாரிகிருஷ்ணன் சார்பு ஆய்வாளரிடம் நான் மனு நேரடியாக கொடுத்தேன். 6.5.2018 ம்தேதி எனது சமுக தலைவர்கள் அனைவரும் கூட்டுசேர்ந்து தியாகராஜா பள்ளியில் வைத்து பெரியோர்கள் முன்னிலையில், வரவு செலவு கணக்குகளை ஒப்படைக்க கோரி எதிர்மனுதாரர்களிடம் கேட்டோம். அப்போதும் எதிர்மனுதார்கள் கணக்குகளை கொடுக்க மாட்டோம் என்று சொல்லி கம்பால் மற்றும் மர சேர்களால் எங்களை தாக்கினார்கள். பின்பு காவல்நிலையத்திற்கு வந்து சம்பவத்தை பற்றி சார்பாய்வாளர் மாரிகிருஷ்ணனிடம் புகார் மனு கொடுத்தோம்.

9. பின்பு மாரிகிருஷ்ணன் பணியிட மாறுதலில் சென்று விட்டார். 6.9.2018 ம்தேதி அதன்பின்பு ஆய்வாளர் பவுல் ஜேசுதாஸ் என்பவரிடம் மனு கொடுத்தோம். அதனடிப்படையில் 3.10.2018 ம் தேதி என்னையும் எதிரிமனுதார்கள் அனைவரையும் அழைத்து விசாரணை செய்தார். விசாரணையின்போது காவல் ஆய்வாளர் எதிர்மனுதாரர்களிடம் கணக்குகளை சரியான முறையில் ஆடிட்டிங் செய்து சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார். எதிர்மனுதார்கள் அதை ஏற்றுக்கொண்டு எழுத்து மூலமாக எழுதிக்கொடுத்தார்கள்.

10. பின்னர் எதிர்மனுதாரர்களிடம் பலமுறை கேட்டும் கணக்குகளை ஒப்படைக்கவில்லை. அதன் காரணமாக 16.10.2019 ம்தேதி இரவு 10 மணிக்கு என்னை ஆய்வாளர் வரவழைத்து எதிர்மனுதார்கள் மீது வழக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதாக என்னிடம் அதில் படித்துப்பார்த்து கையெழுத்து போடுமாறு சொன்னார். நான் படித்துப் பார்த்ததில் அந்த மனுவில் 9.12.2018 ம் தேதி எதிர்மனுதார்கள் என்னை தாக்கியதாக தேதி தவறாக குறிப்பிட்டிருந்ததால் நான் அந்த மனுவிலும் முதல் தகவல் அறிக்கையிலும் கையெழுத்து செய்யவில்லை.

11. பின்பு சரியான தேதியான 11.2.2018 என்று சொல்லி என்னிடமிருந்து சம்பவத்தை பற்றி தனியாக வாக்குமுலம் பெற்று என்னிடமிருந்து ஆய்வாளர் காட்டிய மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையில் கையொப்பம் பெற்றார்.

12. 6.5.2018 ம் தேதி எதிர்மனுதார்கள் என்னை தாக்கியது சம்மந்தமாக 25.11.2018 ம் தேதி மற்றும் 18.3.2019 ம் தேதியும் நான் ஆய்வாளரிடம் மனு செய்தேன். பல்வேறு ஆய்வாளர்கள் மற்றும் சார்பு ஆய்வாளர்கள் எதிர்மனுதார்களிடமிருந்து அவர்களது வரவு செலவு கணக்குகளை கேட்டிருநதோம். எதிர்மனுதார்கள் தற்போது வரை ஒப்படைக்கவில்லை. எதிர்மனுதார்கள் முறைகேடாக வரவு செலவு கணக்குளை வைத்திருப்பதால் எங்களிடம் ஒப்படைக்காமல் இருக்கிறார்கள். மேலும் எதிர்மனுதார்கள் என்னை தாக்கியதற்காக காவலர்கள் எந்தவொரு நடவடிக்கையும் தற்போது வரை எடுக்கவில்லை.

வழக்கு தொடர்பான ஆவணங்களை மனுதாரர் தாக்கல் செய்யவேண்டும் என்பதற்காக சத்திய பிரமாண வாக்குமுலம் ஒத்தி வைக்கப்படுகிறது.